# தலைவாசல்

Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 101 | thalaivaasaltv@gmail.com | திங்கட்கிழமை | ஜனவரி 18, 2021


**இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்தவுக்கு கொரோனா தொற்று உறுதி!**

இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்தவுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. 03





படங்கள் : முல்லை. ஊடகவியலாளர் குமணன்

# முல்லைத்தீவு குருந்தூர் மலையில் ஆதிசிவன் ஐயனார் ஆலயம் அழிப்பு

## புத்தர் சிலை நாட்டப்பட்டு அகழ்வாராய்ச்சி ஆரம்பம்

தமிழ் மக்களுக்கு சொந்தமான வரலாற்றுச் சிறப்புமிக்க ஆதி சிவன்- ஐயனார் ஆலயம் அமைந்துள்ள குருந்தூர் மலை மற்றும் மணலாறு - படலைக்கல்லு ஆகிய இடங்களில் இரண்டு பழமைவாய்ந்த பௌத்த விகாரைகள் இருந்தமைக்கான தொல்லியல் சிதைவுகள் காணப்படுவதாக தெரிவித்து தொல்லியல் திணைக்களத்தால் அகழ்வு ஆராய்ச்சி பணிகள் இன்று (ஜன.18) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அகழ்வு ஆராய்ச்சிப்பணிகள் ஆரம்பமும் புத்தர் சிலை அமைக்கும் வழிபாட்டிலும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகம், பேராசிரியர் அனுர மானதுங்க, தொல்லியல் அமைச்சின் செயலாளர் மற்றும் முல்லைத்தீவு பாதுகாப்பு படைகளின் தளபதி ஜெகத் ரத்நாயக்க ஆகியோர் பௌத்த ஆகம முறைப்படி பிரித் ஓதி ஆரம்பித்து வைத்தனர்.

மணலாறு படலைகல்லு பகுதியிலும் கல்யாண புரத்திலும் விகாரை சிதைவுகள் காணப்படுவதாக தெரிவித்து இன்றைய தினம் அங்கும் தொல்லியல் அகழ்வாராச்சி பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

59 ஆவது படைப்பிரிவின் 591ஆவது பிரிகேட்டினால் ஏற்பாட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இராணுவத்தினரின் கொடிகள் குருந்தூர் மலையை சூழ நாட்டப்பட்டு நூற்றுக்கணக்கான இராணுவம் மற்றும் பொலிஸார் பாதுகாப்பு கடமைகளுக்காக குருந்தூர் மலையிலிருந்து அருகிலுள்ள குமுளமுனை கிராமம் வரைக்கும் நிறுத்தப்பட்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கபட்டது.

குமுளமுனை, தண்ணிமுறிப்பு கிராம மக்களின் வழிபாட்டு தலமாக குருந்தூர் மலையில் பழமை வாய்ந்த ஆதிசிவன் ஐயனார் ஆலயம் உள்ளது. அங்கு சென்று அயல் கிராம மக்கள் பொங்கல் வழிபாடுகளில் ஈடுபட்டு வந்தனர்.

ஆனால் நேற்றைய தினம் குருந்தூர் மலை பகுதிக்குள் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், வினோ நோகராதலிங்கம் ஆகியோர் ஆதிசிவன் ஐயனார் ஆலயம் அங்கு இல்லாது உடைத்து அழிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

இந்த நிலையில் குருந்தூர் மலையில் இருந்த சூலம் ஒன்று இடம் தெரியாது உடைத்து எறியப்பட்டுள்ளது. 03



குருந்தூர் மலை ஆதி ஐயனார் ஆலயத்தில் மடை பரவி பொங்கலிட்டு மக்கள் வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர் இது 2015 இல் நடைபெற்றது.



இன்று (18.01.2021) அங்கிருந்த சூலம் உடைத்து எறியப்பட்டு புத்த பெருமான் கொண்டு வரப்பட்டு வழிபாடுகளோடு விகாரை இருந்த இடம் என தெரிவித்து தொல்லியல் ஆய்வுகளை இராணுவத்தோடு இணைந்து இலங்கை தொல்லியல் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

### ஐயனார் வழிபாடு

குமுளமுனை ,ஆண்டான்குளம் ,தண்ணிமுறிப்பு கிராம மக்களின் குல தெய்வமாக ஐயனார் இருக்கின்றார். இந்த கிராம மக்கள் வயலுக்கு செல்லும் போதும் காடுகளுக்கு வேட்டைக்கு செல்லும்போதும் ஐயனாரை வணங்கியே செல்வார்கள். ஒரு துன்பம் நிகழ்ந்தாலும் "என்ர ஐயனே" என்றுதான் உச்சரிப்பார்கள் . கிராமிய தெய்வமாகிய அய்யனார் எந்தவித ஆடம்பரங்ளும் இன்றி இரும்பினால் ஆன சூலாயுதமாக மரத்தடியில் இருப்பார் .பாக்கு வெற்றிலை பழம் கொண்டு மடை பரவி மக்கள் வழிபடுவார்கள்.

**காணி சுவீகரிப்புக்கு எதிராக யாழ் மண்டைதீவு பகுதியில் போராட்டம்**

யாழ்ப்பாணம் மண்டைதீவு பகுதியில் பொதுமக்களின் காணிகளை சுவிகரிப்பதற்கு எதிராக பாரிய போராட்டமொன்று இன்று முன்னெடுக்கப்பட்டது. 03

**பருத்தித்துறையில் இருவருக்கும் மன்னாரில் இருவருக்கும் கொரோனா தொற்று** 03

**தேசிய பாடசாலைகளில் தரம் -6இல் அனுமதி கிடைக்காத மாணவர்களை மேன்முறையீடுகளை சமர்ப்பிக்கக் கோரல்** 03






**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

# இடமாற்றத்தில் பாரபட்சம் யாழில் ஆசிரியர்கள் போராட்டம்






ஆறு வருடம் கஷ்டப் பிரதேசங்களில் சேவையாற்றிய ஆசிரியர்கள், தமக்கான இடமாற்றத்தை வழங்க கோரி மாபெரும் போராட்டமொன்றை யாழ்ப்பாணத்தில் இன்று (திங்கட்கிழமை) முன்னெடுத்துள்ளனர்.

யாழ். மாவட்ட செயலகத்தின் முன்பாக இன்று ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டமானது, வட மாகாண ஆளுநர் அலுவலகத்தின் முன்பாக இடம்பெற்றது.

குறித்த போராட்டத்தின்போது, ஆசிரியர் இடமாற்ற கொள்கையை வலியுறுத்தும் வகையில் பதாதைகளை ஏந்தி, ஆசிரியர்கள் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

அதேநேரம், வட.மாகாண ஆளுநர், வட.மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், இலங்கை ஆசிரியர் சேவை சங்க தலைவர் உட்பட மத்திய கல்வி அமைச்சர் ஆகியோருக்கு மகஜர் கையளித்துள்ளனர்.

அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது, 'ஒரு பிரதேசத்தில் அல்லது கல்லூரியில் தொடர்ச்சியாக சேவையாற்றுவதன் ஊடாக ஏற்படக்கூடிய ஒரு தலைமை ஆசிரியர் தொழிலுக்கு பாதிப்புகள் ஏற்படுவதனால் பல்வேறுபட்ட பிரதேசங்கள், பல்வேறுபட்ட சமூக பொருளாதார மற்றும் கலாசார சூழல்களில் உள்ள கல்லூரிகளில் சேவைக்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு பல்வேறு அனுபவங்களைப் பெற்றுக்கொண்டு தமது திறனை விருத்தி செய்வதற்கும் சகல ஆசிரியர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

மேலும் தேசிய ஆசிரியர் இடமாற்ற கொள்கை சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றங்கள் இடம்பெறுவதில்லை. ஆசிரியருடைய இடமாற்றத்தில் பாரபட்சம் காட்டப்படுகின்றது என மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை இடமாற்றம் தொடர்பாக தமக்கு உரிய தீர்வினை வழங்காவிடின், தேசிய ரீதியில் இந்த போராட்டத்தை முன்னெடுக்க உள்ளதாகவும் தெரிவித்தனர்.

## தலைவாசல் தினம் ஒரு ஆரோக்கிய தகவல்

### மதுபான பாவனை

மதுபான பாவனை உடல் நலத்திற்கு பாரிய கேடு விளைவிக்கும் பழக்கமாகும். மதுபான பாவனையினால் குருதியமுக்கம் அதிகரித்தல், மதுவினால் மூளை அழற்சி, ஈரல் தொழிற்பாடு குறைவடைதல், ஈரல் அழற்சி, ஈரல் புற்றுநோய், ஆண்மைக் குறைவும் மலட்டுத்தன்மை போன்ற தீய விளைவுகள் ஏற்படும்.

மதுபானம் மான உளைச்சலை குறைக்கும், சிறிதளவு அருந்துவது ஆரோக்கியமானது, உடல் களைப்பைக் குறைக்கும் என்ற பல மூட நம்பிக்கைகள் தற்போது பலர் மத்தியில் உள்ளது. இது மிக தவறான புரிந்துணர்தல் ஆகும்.

தற்போது மது அருந்துபவர்கள் படிப்படியாக குறைத்து முற்றாக நிறுத்தின் மேற்கூறிய பாதக விளைவுகளின் சிக்கல் தன்மைகளை குறைத்து ஆரோக்கியமாக வாழலாம்.

மதுபழக்கத்தில் விடுபட சிரமப்படுவோர் மருத்துவ ஆலோசனை மூலம் அதற்கான குறுகிய கால சிகிச்சை பெறின் முற்றாக நிறுத்த முடியும்.

**வைத்தியகலாநிதி கோ.றஜீ வ்**

# வவுனியாவில் சில பகுதிகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிப்பு

வவுனியா- பட்டானிச்சூர் கிராமம் தனிமைப்படுத்தலில் இருந்து முற்றாக விடுவிக்கப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் குறித்த பகுதியில் அதிகளவான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமையினால் உடன் அமுலுக்கு வரும் வகையில் பட்டானிச்சூர் பகுதி சுகாதார பிரிவினரால் முடக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி பொறியல் தொழில்நுட்ப பீடத்தில் 3ம் வருடத்தில் கல்வி கற்கும் வவுனியா பட்டானிச்சூர் மாணவர் ஒருவருக்கும் அதே பகுதியினை சேர்ந்த பட்டானிச்சூர் பகுதியினை சேர்ந்த கர்ப்பவதி பெண் ஒருவருக்கும் அண்மையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதன்பின்னர் குறித்த கிராமம் சுகாதார பிரிவினரினால் முடக்கப்பட்டு, கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது, ஒரே குடும்பத்தினை சேர்ந்த மேலும் 7கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து வவுனியா வர்த்தகர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகளில் மேலும் 55பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இவ்வாறு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகளின் அடிப்படையில் வவுனியாவில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 174 ஆக அதிகரித்தது.

இந்நிலையில் தற்போது கொரோனா வைரஸ் தொற்று, ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளமையினால் பட்டானிச்சூர் கிராமம் தனிமைப்படுத்தலில் இருந்து முற்றாக விடுவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். இராணுவத் தளபதி அரச அதிபருடன் சந்திப்பு

யாழ்.மாவட்டத்தின் கொரோனா நிலவரம் குறித்து மாவட்ட கொரோனா கட்டுப்பாட்டு இணைப்பு அதிகாரியும் கட்டளை தளபதியுமான

மேஜர் ஜெனரல் செனரத் பண்டாரவிற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது

குறித்த சந்திப்பின் போது யாழ். மாவட்டத்தில் தற்போதுள்ள கொரோனா நிலைமைகள் மற்றும் எதிர்காலத்தில் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள்

மற்றும் தற்போதைய நிலையில் பாடசாலைகள் மற்றும் பொதுச் சந்தைகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக கொரோனா தொற்று பரவுவதை தடுத்தல் தொடர்பாக பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் குறித்த சந்திப்பின்போது ஆராயப்பட்டுள்ளது.

குறித்த சந்திப்பில் பலாலி இராணுவ கட்டளை தலைமையக ராணுவ உயர் அதிகாரிகள் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வருட ஆரம்பத்தில் இடம்பெற்ற குறித்த சந்திப்பில் நினைவுச் சின்னங்களை பரிமாறிக்கொண்டனர்.

# திருமண வைபவங்களை நடத்துவதற்கு வவுனியாவில் தடை

வவுனியா மாவட்டத்தில் திருமண மண்டபங்களில் திருமணங்களை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், பொதுச்சந்தைகளை மீள திறப்பதற்கும் மறு அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அதேநேரம், மருதனார் மட கொத்தணியில் இருந்து தற்காலிக இடத்திற்கு மாற்றப்பட்ட பொதுச்சந்தைகளை இன்று (திங்கட்கிழமை) முதல் மீளவும் பழைய இடங்களில் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# நெடுந்தூர ரயில் பயணங்கள் மீண்டும் ஆரம்பம்

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த தூரப் பிரதேசங்களுக்கான ரயில் சேவைகள் இன்று (திங்கட்கிழமை) முதல் மீள ஆரம்பிக்கப்படுகின்றன.

ரயில்வே திணைக்களம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, இன்று நள்ளிரவு முதல் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த தனியார் ரயில் சேவை தொழிற்சங்கங்களின் பணிப்புறக்கணிப்பை தற்காலிகமாக கைவிட தீரமானிக்கப்பட்டுள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.



தங்களது பிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கடந்த தினம் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில், பணிப்புறக்கணிப்பை கைவிட தீர்மானித்ததாக தனியார் பேருந்து சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு தமிழ் மாணவிகள் பிரான்சில் கொலை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு தமிழ் மாணவிகள் பிரான்சில் மருத்துவம் பயிலும் போது ஐந்து நாட்களுக்கு முன்பாக இது இளைஞர்களால் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தின் அல்லைப்பட்டி பிரதேசத்தில் வசித்து வந்த எஸ். கார்த்திகா என்ற 20 வயது மாணவை தனது இலங்கை தமிழ் காதலனினால் கடந்த 13 ஆம் திகதி குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், மந்துவில் பிரதேசத்திலிருந்தும் பிரான்ஸ் சென்றிருந்த 19 வயது சினேகா சந்திரராசா கடந்த 8 ஆம் திகதி தனது காதலனால் கழுத்தை நெரித்து கொலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கொலைகளில் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்களும் இதுவரை கைது செய்யப்படவில்லை என கொல்லப்பட்ட இரு மாணவிகளின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இரு மாணவிகளிடம் குறித்த இரு சந்தேக நபர்களின் புகைப்படங்கள் இருந்துள்ளதாக பிரான்ஸ் காவல்துறையினர் கண்டுபிடித்துள்ளனர், மேலும் பாதுகாப்பு கேமரா காட்சிகளின் உதவியுடன் அவர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் நடந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து இலங்கையர்களுக்கும் இராணுவப் பயிற்சி



18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து இலங்கை குடிமக்களுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி வழங்குவதற்கான திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இந்த முன்மொழிவினை எண்ணி எவரும் அச்சமடையத் தேவையில்லை என்றும், இந்த தீர்மானம் நாட்டின் முன்னேற்றத்தை கருத்திற்கொண்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த பயிற்சி மக்கள் தமது சொந்த காலில் நிற்கவும் தலைமைத்துவ குணங்களை ஊக்குவிக்கவும் ஒழுக்கமான மற்றும் சட்டத்தை மதிக்கும் நாட்டிற்கு பங்களிக்கவும் உதவும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நடைமுறைகள் பல நாடுகளுக்கு ஒழுக்கத்தை ஏற்படுத்த உதவியுள்ளதுடன், இது இளைஞர்களுக்கு பெருமளவில் பயனளிக்கும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

# கோப்பாய் பிரதேச செயலக எல்லைக்குள் புதிய கிராம சேவகர் பிரிவுகளை உருவாக்க திட்டம்

யாழ்.கோப்பாய் பிரதேச செயலகத்திற்குள் புதிய கிராமசேவகர் பிரிவுகளை உருவாக்குவதற்கான நடவடிக்கை மக்கள் அபிப்பிராயங்களின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்படுவதாக பிரதேச செயலர் திருமதி சுபாஷினி மதியழகன் கூறியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை கோப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்தி கலந்துரையாடல் சிவில் அமைப்புப் பிரதிநிதி ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குகே அவர் இவ்வாறு பதில் அளித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோப்பாய் பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு நடவடிக்கைகள் இடம்பெற்று வரும் நிலையில் கிராம சேவையாளர் பிரிவுகளை அதிகரிக்கா விட்டால் பிரதேச செயலகத்தை இரண்டாக்க முடியாது. அதற்காக பொதுமக்களின் அபிப்பிராயத்தை அறிந்துகொள்ளும் வகையில் பிரதேச ரீதியாக ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகள் பொது மக்களின் அபிப்பிராயங்களை அறிவதற்கான வேலைத்திட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன. இந்நிலையில் சில கிராம சேவையாளர் பிரிவுகள் பிரிப்பதற்கு விருப்பம் தெரிவித்த நிலையில்

சில கிராம சேவையாளர் பிரிவுகள் விருப்பம் இல்லாத நிலையும் காணப்படுகின்றது. ஆகவே தற்போது இடம்பெற்று வரும் விடையம்மக்களுக்காக மக்கள் தமது விருப்பங்களை தெரிவிக்கும் முடியுமே தவிர இறுதி முடிவு அல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தேசிய பாடசாலைகளில்...

தேசிய பாடசாலைகளில் தரம் 6இல் அனுமதிப்பதற்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்ட நிலையில் மேன்முறையீடுகளை முன்வைக்கும் கால அவகாசத்தை கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதனடிப்படையில் பெப்ரவரி 15ஆம் திகதி முதல் மார்ச் 14 வரை இணையத்தின் ஊடாக மட்டும் மேன்முறையீடுகளை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது.

மேன்முறையீட்டு விண்ணப்பத்தை ஙவவிள:ஃஃ ப6யீடஉைஉயவஉைெ.அழந.பழஎ.டமஃசூஃ என்ற முகவரியில் இணையத்திலேயே சமர்ப்பிக்க முடியும் என்றும் கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

## காணி சுவிகரிப்புக்கு...

போராட்டத்தில் போலீசார் குவிக்கப்பட்டதால் பெரும் பதற்றமும் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடதக்கது.

மண்டைதீவு ஜே107 கிராமசேவகர் பிரிவிற்கு உட்பட்ட 29 பேரின் 18 ஏக்கர் பரப்பு காணி சுவிகரிப்பதற்காக நில அளவைத் திணைக்களத்தினரால் காணி அளவீடு செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து காணி அளவீடு செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து காணி உரிமையாளர்களும் பொது மக்களும் அரசியல்வாதிகளும் அங்கு திரண்டிருந்தனர்.

இவ்வாறு எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு போது நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் காணிகளை அளவீடு செய்வதற்கு வருகை தந்திருந்தனர்.

இதன் போது காணிகளை அளவீடு செய்ய கடும் எதிர்ப்பு வெளிப்படுத்திய நிலையில் காணிகளை அளவீடு செய்யாமலே நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றிருந்தனர்.

இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களும் செல்ல தயாரான நிலையில் போலீஸ் பாதுகாப்புடன் நில அளவை திணைக்கள அதிகாரிகள் மீண்டும் அங்கு வந்து காணிகளை அளவீடு செய்ய போவதாக அறிவித்தனர்.

ஆயினும் காணிகளை அளவீடு செய்ய அனுமதிக்க முடியாதென்று எதிர்ப்பு தெரிவித்து,

பொது மக்களும் அரசியல் பிரமுகர்களும் காணிகளின் உரிமையாளர்களும் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது. ,தன் பின்னர்,

அங்கு வருகை தந்த வேலனை பிரதேச செயலர் சோதிநாதன் ,ங்குள்ளவர்களின் எதிர்ப்பு காரணமாக காணி அளவிடுவதை நிறுத்துவதாகவும்,

காணி அமைச்சுடன் இது குறித்து பேசி அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதாகவும் அதுவரையில் காணி அளவீடு மேற்கொள்ளபடாதென்றும் தெரிவித்தார்.

இதனையடுத்து நில அளவை திணைக்களத்தினரும் பொலிஸாரும் திரும்பி சென்றனர்.

இதன் பின் அங்கு நின்றிருந்த மக்களும் அரசியல் வாதிகளும் சென்றிருந்நமை குறிப்பிடதக்கது.

இந்தப் போராட்டத்தில் காணி உரிமையாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

## முல்லைத்தீவு...

அங்கிருந்த ஆலய சின்னங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது.

குருந்தூர்மலை இடம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் தாக்கல் செய்ய வழக்கில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றால் 2018இல் கட்டளை ஒன்று வழங்கப்பட்டது.

“குருந்தூர் மலையில் உள்ள தமிழ் மக்களுக்கு சொந்தமான ஆலயத்தில் மக்கள் வழிபடலாம். அங்கு எந்தவிதமான கட்டுமானங்களையும் இரு சாராரும் செய்ய முடியாது.

தொல்லியல் திணைக்களம் மாத்திரம் ஆய்வுகளை செய்யலாம். வேறு தரப்பினர் ஆய்வுகளை செய்ய முடியாது.

தொல்லியல் ஆய்வுகளை செய்வதாக இருந்தால் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தொல்லியல் துறையின் பங்களிப்போடு மேற்கொள்ளப்பட வேண்டும்” என்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## பருத்தித்துறையில்...

பருத்தித்துறை நகரில் இரண்டு பேருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை இன்று திங்கட்கிழமை கண்டறியபட்டுள்ளது.

33 வயதுடைய தாயாரும் 6 வயதுடைய மகனுமே தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த தகவலை வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் உறுதிப்படுத்தினார்.

மேல் மாகாணத்திலிருந்து வந்த இருவர் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கோரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்கள் இருவருடனும் தொடர்புடையவர்கள் சுயதனிமைப்படுத்தப்படுவார்கள் என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

இதனிடையே மன்னார் நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை இன்று திங்கட்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

மன்னாரில் கடந்த சில நாள்களில் அடையாளம் காணப்பட்டவர்களுடன் நேரடித் தொடர்புடைய 2 பேரே இன்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் இன்று 350 பேரில் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன.

அவர்களில் 2 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

## இராஜாங்க அமைச்சர்...

அமைச்சர் ரேப்பிட் அண்டிஜன் சோதனையை மேற்கொண்ட போது அவருக்கு கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதனை அடுத்து அமைச்சரின் உதவியாளர்கள் உட்பட 10 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

பாராளுமன்றத்தில் தயாசிறி ஜயசேகர, ரவூப் ஹக்கீம், வாசுதேவ நாணயக்கார ஆகியோருக்கு ஏற்கனவே கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஹொரனவில் அண்மையில் டயர் உற்பத்தி ஆலை திறப்பு விழாவில் அமைச்சர் நிஷாந்த கலந்து கொண்டதாக கூறப்படுகிறது, இதில் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவும் கலந்து கொண்டார்.

அவர் இரண்டு நாட்களுக்கு முன்பு கேகாலையில் அரசு பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பிலும் கலந்து கொண்டார்.

பாராளுமன்றத்தில் வைத்து கேகாலையில் சேர்ந்த ஆயுர்வேத மருத்துவ பயிற்சியாளர் தம்மிக பண்டாரா தயாரித்த ஆயுர்வேத கொறொனா தடுப்பு பாணியையும் உட்கொண்டவராவார்.

# பொருளாதாரக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய கோரிக்கை!

நல்லாட்சி அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையை மறுபரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றேன் என முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களின் அவசியம் தொடர்பாக மங்கள சமரவீர வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, “பெரும்பாலான அரசியல் தலைவர்கள், மக்களை ஏமாற்ற அவர்கள் பயன்படுத்திய அதே பொய்களால் இப்போது தாக்கப்படுகிறார்கள்.

மேலும் நாட்டிற்கு பாதகத்தினை ஏற்படுத்தும் செயற்பாடுகளை கண்டு மகிழ்ச்சியாக இருக்க முடியாது. இதே



வேளை இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய வெளிநாட்டு முதலீட்டாளர்களை அணி திரட்டுவது இன்று அவசியம்.

அத்துடன் இந்த புதிய முதலீடு, இன்று நாட்டின் பொருளாதார மையங்களில் ஒன்றான இலங்கை துறைமுக அதிகார சபைக்கு ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன்.

இலங்கை போன்ற ஒரு நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின், முதலில் தேவையான பின்னணியைத் தயாரித்து, அதன் ஊடாக அதிக வெளிநாட்டு முதலீட்டாளர்களை நம் நாட்டிற்கு ஈர்க்கும் திட்டங்களினால் மாத்திரமே இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும்.

இன்று வியட்நாம், கம்போடியா போன்ற சோசலிச நாடுகள் கூட ஒரு நாட்டை வளர்ப்பதில் வெளிநாட்டு முதலீட்டின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஏராளமான சலுகைகளை வழங்குகின்றன.

மேலும், பெரும்பாலான வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஒரு வெளிப்படையான சந்தைப் பொருளாதாரத்தை எதிர்பார்க்கிறார்கள்.

அந்தவகையில் இதுபோன்ற பொருளாதார கட்டமைப்பினை கடந்த 2015 ஆம் ஆண்டில் எங்களது அரசாங்கம் எடுத்த முயற்சியின் காரணமாக, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் அதிக எண்ணிக்கையிலான வெளிநாட்டு முதலீட்டாளர்களை எம்மால் ஈர்க்க முடிந்தது.

மேலும், முதலீட்டு நட்பு சூழல் குறியீட்டின் வளர்ச்சியால் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்க முடிந்தது. மேலும் வசதியாக புதிய விதிகளை உருவாக்க நாங்கள் தயாராக இருந்தோம்.

எனவே தற்போதைய சூழ்நிலையில், நல்லாட்சி அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையை மறுபரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றேன்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனாவால் நேற்று உயிரிழந்த 8 பேரினது விபரம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் மேலும் 8 மரணங்கள் பதிவாகிய நிலையில் உயிரிழந்தவர்கள் தொடர்பான முழுமையான விபரத்தினை அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் இந்த விடயம் தொடர்பான முழுமையான விபரத்தை வெளியிட்டுள்ளது.

அதற்கமைய கொலன்னாவையைச் சேர்ந்த 63 வயதான பெண்ணொருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் கடந்த 13ஆம் திகதி உயிரிழந்தார்.

அவரின் மரணத்திற்கான காரணம் கொரோனா நிமோனியா நிலைமையே என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயதுடைய ஆணொருவர் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொரோனா தொற்று உறுதியானதையடுத்து, முல்லேரியா ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில்,கடந்த 14ஆம் திகதி அவர் உயிரிழந்தார்.

கொரோனா நிமோனியா மற்றும் அதிக இரத்த அழுத்தம் என்பன அவரின் மரணத்திற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடபுசல்லாவையைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் உடபுஸ்ஸல்லாவை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் கடந்த 15ஆம் திகதி உயிரிழந்தார்.



கொரோனா தொற்று மற்றும் நுரையீரலில் ஏற்பட்ட தொற்று என்பன அவரின் மரணத்திற்கு காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கேகாலை பிரதேசத்தைச் சேர்ந்த 87 வயதுடைய ஆணொருவர் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் கடந்த 16ஆம் திகதி உயிரிழந்தார்.

கொரோனா தொற்றினால் ஏற்பட்ட மூச்சுக்குழாய் அழற்சி மற்றும் இருதய நோயும் அவரின் மரணத்திற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயது ஆணொருவர் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் கொரோனா தொற்று உறுதியானதை அடுத்து ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் கடந்த 16ஆம் திகதி உயிரிழந்தார்.

கொரோனா நிமோனியா நிலைமையும் இருதய நோயும் அவருடைய மரணத்திற்கானகாரணம்எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலனறுவையை சேர்ந்த 66 வயதுடைய ஆணொருவர் வெலிகந்த ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் கொரோனா தொற்று உறுதியானதை அடுத்த ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்றைய தினம் உயிரிழந்தார்.

தீவிரமடைந்த ஆஸ்துமா நிலைமையும் இரத்தம் நஞ்சானமை, கொரோனா தொற்று என்பன அவரின் மரணத்திற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு 08 பகுதியைச் சேர்ந்த 83 வயதுடைய ஆணொருவர் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் கொரோனா தொற்று உறுதியானதை அடுத்து ஐ.டி.எச் மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்றைய தினம் உயிரிழந்தார்.

இரத்தம் நஞ்சான மை மற்றும் நிமோனியா நிலைமை அவரின் மரணத்திற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடுதும்பர பகுதியை சேர்ந்த 75 வயதுடைய ஆணொருவர் அவிசாவளை வைத்தியசாலையில் தொற்று உறுதியானதை அடுத்து முல்லேரியா ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்றைய தினம் மரணித்தார்.

சுவாசத் தொகுதியில் ஏற்பட்ட தாக்கம் நிமோனியா மற்றும் மாரடைப்பு என்பன அவரின் மரணத்திற்கு காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் மரணித்தவர்களின் மொத்த எண்ணிக்கை 264 ஆக அதிகரித்துள்ளது.

# இந்தோனேசிய நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 77 ஆக அதிகரிப்பு

இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 77 ஆக அதிகரித்துள்ளது.

இந்தோனேசியாவின் சுலவேசி தீவில் கடந்த வெள்ளிக்கிழமை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.2 ஆக பதிவாகியது.

இந்த நிலநடுக்கம் காரணமாக அப்பகுதியில் உள்ள பல்வேறு கட்டடங்கள் கடுமையாக இடிந்து தரைமட்டமானது.

இந்த நிலநடுக்கத்தில் பொதுமக்கள் மிகுந்த அச்சமடைந்து தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறினர். அதே நேரம், சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

இந்த நிலநடுக்கத்தால் பலர் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டனர். அவர்களை மீட்கும் நடவடிக்கையில் மீட்புக்குழுவினர் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

மீட்புக்குழுவினர் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கிய பலரை உயிருடன் மீட்டனர். இந்த நிலநடுக்கத்தால் 27 ஆயிரத்து 800 பேர் தங்கள் வீடுகளை இழந்தனர்.

இந்த நிலநடுக்கத்தில் சிக்கி 42 பேர் உயிரிழந்ததாக முதல்கட்ட தகவல்கள் வெளியானது.

இந்நிலையில், நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 77 ஆக அதிகரித்துள்ளதாக இந்தோனேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை, 820 பேர் படுகாயமடைந்துள்ள நிலையில், வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்கள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும் இந்தோனேசிய அரசு தெரிவித்துள்ளது.

# இலங்கையில் கொரோனா தடுப்பூசியின் பாவனை குறித்த அறிவிப்பு வெளியானது

கொரோனா வைரஸ் தடுப்பூசியை செலுத்தும் பணி பெப்ரவரி இறுதி வாரத்தில் அல்லது மார்ச் மாத தொடக்கத்தில் அரசாங்கம் தொடங்கும் என கொரோனா தடுப்பூசி திட்டம் மற்றும் தேசிய அபிவிருத்தி தொடர்பிலான ஜனாதிபதி செயலணியின் தலைவர் லலித் வீரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா, சீனா மற்றும் ரஷ்யாவிலிருந்து தடுப்பூசிகளைப் பெறுவதற்கான இருதரப்பு கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

உலக சுகாதார அமைப்பு 20 சதவீத மக்களுக்கு தேவையான தடுப்பூசி மருந்துகளை இலவசமாக நன்கொடையாக அளிக்கும் என்றும் உலக சுகாதார அமைப்புக்கு இது தொடர்பான தேசிய திட்டத்தை சுகாதார அமைச்சகம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் உலக சுகாதார அமைப்பு தங்களுக்கு எந்த தடுப்பூசியை இலவசமாக வழங்கும் என்பது தங்களுக்குத் தெரியாது என்றும் அவர் கூறினார்.

இந்தியாவில் தேசிய தடுப்பூசி பயன்பாடு இலங்கைக்கு ஒரு அனுபவமாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

இதேநேரம், சீன தடுப்பூசிகள் குறித்து கருத்து தெரிவித்த அவர், இந்தோனேசியா போன்ற நாடுகள் தங்கள் மக்களுக்கு தடுப்பூசிகளை செலுத்தும் நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளன.

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் (என்.எம்.ஆர்.ஏ) ஒப்புதல் அளித்தவுடன் இலங்கை அரசாங்கமும் தடுப்பூசிகளுக்கு ஒப்புதல் அளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கொழும்பு நகரசபை உறுப்பினர் உட்பட 10 பேருக்கு பிடியாணை!

கொழும்பு நகரசபை உறுப்பினர் குலதிஸ்ஸ கீகனகே மற்றும் 9 பேரை கைது செய்வதற்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 28 ஆம் திகதி தெமட்டகொடையிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான கட்டட வளாகத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மன்றில் முன்னிலையாக தவறிய நிலையில் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.